



திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவரணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் திருத்தணியில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் கலந்து கொண்டு பி.எம்ஸ்ரீ திட்டம், சி.பி.எஸ்.சி பள்ளிகளில் மும்மொழி கொள்கை, உயர்கல்விக்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பை நிறுவமுயலும் VBSA மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக மாணவர் அணி சார்பில் நாளை 23ஆம் தேதி அன்று ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாணவர் அணி நிர்வாகிகள் முரளிசேனா, எழிலரசன், கோபிநாத், டில்லி பாபு,சதிஷ், குணசேகரன், தனராஜ், யுவப்ரியான், விஷ்ணு விக்கி, திவாகர், அன்பு, மாருதிபிரசாந்த், உள் பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட மாணவரணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் ஆவடியில் மாவட்ட அவை தலைவர் ம.இராஜி தலைமையில் மாவட்ட அமைப்பாளர் வே.தியாகராஜன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு பி.எம் ஸ்ரீ திட்டத்திற்கு எதிர்ப்பு, சி.பி.எஸ்.சி பள்ளிகளில் மும்மொழி கொள்கை, உயர்கல்விக்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பை நிறுவ முயலும் VBSA மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக மாணவர் அணி சார்பில் நாளை 23ஆம் தேதி அன்று ஆளுநர் மாளிகை முற்றுகை போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வது குறித்துபல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமைச்செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், வி.குமார், காஞ்சனா சுதாகர், உள்பட கழக நிர்வாகிகள் மாணவரணி நிர்வாகிகள் உள்ளனர்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

நாமக்கல், ஜூன் 23-

நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில், ஆலோசனைக் கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான தளபதி அரங்கில் நடைபெற்றது.

மாநில மாணவர் அணி துணை செயலாளர் சுரேஷ் குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார்.

கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் வரும் 28ஆம் தேதி நவீன தமிழ்நாட்டின் சிற்பி தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மாணவர்களுக்கு கருத்தரங்கம் திருச்செங்கோடு சி.எச்.பி.காலனியில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கில் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் உள்ள மாணவரணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல்லில் GEN Z DMK சந்திப்பு கூட்டம்!

# இளைஞர்களுக்கான புதிய முயற்சிகள் அறிமுகம்!

## பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி தமிழ்நாடு அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்!

நாமக்கல், ஜூன் 23-

நாமக்கல்லில் GEN Z DMK NAMAKKAL சார்பில் சந்திப்பு கூட்டம் நிர்மலா ஸ்போர்ட்ஸ் வில்லேஜில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு GEN Z DMK NAMAKKAL சந்திப்பு ஒருங்கிணைப்பாளர் கடல் அரசன் கார்த்தி வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு மறந்த தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் இளைஞர்களின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் இளைஞர்களின் தேவைகள் மற்றும் GEN Z இளைஞர்களின் பங்கு குறித்து சிறப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில் சமூக ஊடகத்தின் உட்பக்கம் நேரானது என்ற தலைப்பில் சூ.க.தாரணி, “Reelsல இருந்து Realityக்கு வாங்க BRO...” என்ற தலைப்பில் தருண்குமார், “அவதூறுகளை அழித்து நோக்கி தாக்குகளை வீழ்த்துவோம்” என்ற தலைப்பில் உதயம் கே.நந்தகுமார், “நாங்கள் வீழ்வோம் என்று நினைத்தாயோ மீண்டும் எழுவோம்” என்ற தலைப்பில் நந்தகோபால், “தி.மு.க பயமும், தி.மு.க வெல்லும்” என்ற தலைப்பில் ம. மோகனித் ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து GEN Z இளைஞர்களின் கலந்துரையாடல் நடைபெற்றது. நிறைவாக GENZ DMK NAMAKKAL சந்திப்பு ஒருங்கிணைப்பாளர் அன்பில் சத்தியசீலன் நன்றி கூறினார்.

நாமக்கல் GENZ மன்றத்தின் நோக்கம் நிறைவேறுவதற்காக புதிய முயற்சிகள் மற்றும் செயல் திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நாமக்கல் பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை முன்பு இளைஞர்கள் மற்றும் பெண்கள் அனைவரும் கூடி தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை எதிர்த்து கோஷங்கள் எழுப்பி இது குறித்து சட்டமன்றத்தில் எடுத்துரைத்தும் அதற்கு பதில் அளிக்காத முதலமைச்சர் ஜோசப் விஜயை கண்டித்தும் கோஷங்களிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி கருப்பு வண்ண பலூன்களை பறக்கவிட்டனர்.

# குடிநீர் கேட்டு த.வெ.க. அமைச்சரை பெண்கள் முற்றுகை!

## ‘பார்ப்போம்’ எனக்கூறி நழுவல்!

திருப்பரங்குன்றம், ஜூன் 23 -

மதுரை, திருப்பரங் குன்றம் வடக்கு ரத வீதியில் முதல்வர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று ரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற அமைச்சர் நிர்மல்குமார், நிகழ்ச்சியை முடித்துவிட்டு வெளியே வந்தார். அப்போது அங்கு நின்றிருந்த பெண்கள், திடீரென அமைச்சரை முற்றுகையிட்டு, “எங்கள் பகுதியில் குடிநீர் சரிவர வருவதில்லை. முறையாக குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றனர். அதற்கு அமைச்சர், ‘பார்ப்போம்’ என்று கூறி கிளம்பிச் சென்றார். அப்போது உடனிருந்த மாவட்டச் செயலாளர், பெண்களை சமாதானம் செய்தார்.

மேலும் அங்கிருந்த தவெக தொண்டர் ஒருவர், ‘சத்தம் போடாமல் மெதுவாக கேளுங்கள்’ என பெண்களிடம் கூறினார். அதற்கு பெண்கள், “குறைகளை கூற வந்த எங்களை அமைச்சர் கண்டுகொள்ளவேயில்லை.

குடிநீர் சரியாக வராததால் விலை கொடுத்து தண்ணீர் வாங்குகிறோம். சாலை முழுவதும் குண்டும், குழியுமாக உள்ளது. இறந்தவர்களை கூட தூக்கி செல்ல கடும் சிரமமாக உள்ளது.

எங்கள் பிரச்னைகளை எங்கு சென்று யாரிடம் சொல்வது என தெரியவில்லை. அமைச்சரிடம் கூறினால் ‘பார்ப்போம்’ என கூறிவிட்டு செல்கிறார்'' என ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் அத்திப்புலியூரில் சோபா மாடல் அரசின் முதல்வர் நடிகர் விஜய் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியின்படி உத்திரவாதமான கூட்டுறவு பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக்கோரி திருவோடு ஏந்தி மண்சோறு சாப்பிட்டு உண்ணாவிரதப் போராட்டம் செய்தனர்.

### கண்ணம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி 10 வயது வடமாநிலப் பெண் குழந்தை மாயம்!

# ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கப்பெண் படை என்ன செய்கிறது?

## கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் கேள்வி!



கோவை, ஜூன் 23-

சூலூர் கண்ணம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி 10 வயது வடமாநில பெண் குழந்தை மாயம், ஆடம்பரமாக ஆரம்பிக்கப் பட்ட சிங்கப்பெண் படை என்ன செய்கிறது? என கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவை மாவட்டம் சூலூர் வட்டம் கண்ணம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்து வரும் 10 வயது வடமாநில பெண் குழந்தை ஜூன் 21 ஆம் தேதி நேற்று முதல் காணவில்லை என புகார். தேடிக்கொண்டிருக்கிறோம், தேடிக்கொண்டிருக்கிறோம்! இது தான் காவல் துறையின் பதில்.

கடந்த மாதம் 21ம் தேதி இதே சூலூர் பகுதியில் 10 வயது பெண் குழந்தை கயவர்களால் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு உயிரிழந்து தமிழ் நாட்டை உலுக்கிய நிகழ்வில் இருந்து தமிழ் நாடு இன்னும் விடுபடவில்லை!

அதேபோல கடந்த மூன்று நாட்களுக்கு முன்னதாக சென்னையில் 3 வயது வட மாநில பெண் குழந்தை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி சிதைக்கப்பட்டு இறந்த சம்பவம் இன்றும் நெஞ்சை விட்டு அகலாமல் தமிழக மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது!

ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கப்பெண் படை என்ன செய்கிறது!

சிங்கப்பெண் என்பது மக்களை ஏமாற்ற ஒரு ‘ஷூட்டிங்’ ஏற்பாடு மட்டும் தானா!

இங்கு குழந்தைகள் முதல் பாட்டிகள் வரை அனைவரின் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை! கற்புக்கும் பாதுகாப்பு இல்லை!

கடந்த தி.மு.க. ஆட்சியில் மாவட்ட முழுவதும் காவல்துறை கண்காணிப்பு (VISUAL) ரோந்து சுற்றி வந்த காரணத்தினால் இந்த மாதிரி குற்றங்கள் கோவை மாவட்டத்தில் இல்லை.

அன்று இன்றைய முதலமைச்சராக இருக்கும் விஜய் அவர்கள் அன்றைய முதலமைச்சரை பார்த்து சிம் சார் என கொக்கரித்தவர்கள் இன்று வாய் மூடி மௌனியாகி விட்டனர்!

நடக்கிறதா ஆட்சி! இருக்கிறதா காவல்துறை என மக்கள் கேள்வி கணைகளால் துளைக்க ஆரம்பித்து விட்டனர்!

கடந்த தி.மு.க. ஆட்சியில் பல்லடத்தில் ஒரு சம்பவம் நடந்தவுடன் உடனே செயல்பட்ட திராவிட மாடல் ஆட்சி!

காவல்துறை தோட்ட சாலையில் வசிப்பவர்கள் இடத்திலும், அரசு பள்ளிகளுக்கும் சென்று அறிவுரைகளை கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த ஆட்சியில் எந்த நடவடிக்கையும் இல்லை! எந்த பாதுகாப்பும் இல்லை!

பெயருக்கு சிங்கப் பெண் படை! நாள்தோறும் பெண் குழந்தை காணவில்லை! கற்பழிப்பு ! கொலை! தி.மு.க. ஆட்சியில் அத்தி பூத்தாற்போல் நடந்த சம்பவங்கள் இன்று அன்றாட காட்சி ஆகிவிட்டன!

கண்ணம்பாளையத்தில் காணாமல் போன 10 வயது மதிக்கத்தக்க பள்ளி குழந்தையை போர்க்கால அடிப்படையில் மீட்டு எடுக்காவிட்டால் மீண்டும் ஒரு பாலியல் சம்பவம் நடக்க இடம் கொடுத்ததாக ஆகிவிடும்.

தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்தபோது கொந்தளித்த இன்றைய முதல்வர் அவர்கள் இப்போது கொஞ்சமாவது பொறுப்புணர்ந்து தலையிட்டு இந்த குழந்தையை மீட்டு தமிழகப் பெண்களுக்கும், வட மாநில பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பை உறுதி செய்திடவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஈரோடு மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்!

ஈரோடு, ஜூன் 23-

ஈரோடு மாநகராட்சியில் தூய்மைப் பணிகளைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தூய்மைப் பணியாளர்கள் மாநகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 60 வார்டுகளை சேர்ந்த நான்கு மண்டலங்களுக்கு உட்பட 500க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட 12 மாநகராட்சிகளில் தூய்மை பணிகளை தனியார் பங்களிப்பு முறையில் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் விடுவதற்கான ஏற்படும் செய்யப்படுவதாக கூறப்பட்டு வருகிறது. இதற்கு தமிழ்நாடு முழுவது தூய்மைப் பணியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தூய்மைப் பணிகளை தனியார் மயத்தை தடுத்து நிறுத்த கோரி ஈரோட்டில் தூய்மைப் பணியாளர்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்கக்கூடாது என வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். ஈரோடு மாநகராட்சி அலுவலகத்திற்குள் திரண்ட தூய்மைப் பணியாளர்கள் தங்களது எதிர்ப்புகளைப் பதிவு செய்து கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

தூய்மைப் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைக்கும் அரசாணைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பணியை அரசு மூலமாகவே தொடர வேண்டும் என வலியுறுத்துகின்றனர். 500க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் மாநகராட்சியில் இன்று காலை செய்யவேண்டிய தூய்மை பணிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் அதிகாரிகள் தற்பொழுது பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# மதுரையில் ஆவின் பால் விநியோகம் முடங்கியது!

மதுரை, ஜூன் 22–

மதுரை ஆவினில் ஒப்பந்த வாகனங்கள் நிறுத்தப்பட்டதால், பால் விநியோகம் முழுமையாக தடைபட்டுள்ளது.

சாத்தமங்கலம் பகுதியில் உள்ள ஆவின் பால் பண்ணையில் இருந்து, நாள்தோறும் 1.9 லட்சம் லிட்டருக்கு மேல் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக 74 வாகனங்கள் ஒப்பந்த முறையில் எடுக்கப்பட்டு இருந்தன. இந்நிலையில் 2 ஆண்டு ஒப்பந்தகாலம் முடிவுற்ற நிலையில் ஆறு மாதம் நீட்டிப்பு செய்யப்பட்டது. அதுவும் முடிவடைந்த நிலையில், புதிய ஒப்பந்தத்தின் போது வாகனங்களுக்கான கட்டணத்தை உயர்த்தி தர வேண்டும் என வாகன உரிமையாளர்கள் கோரிக்கை வைத்தனர். அங்குள்ள அதிகாரி ஒருவர், வாகனத்திற்கு தலா ரூ.2 லட்சம் கொடுத்தால் நீங்கள் கேட்கும் தொகையை வழங்க ஏற்பாடு செய்வதாக தெரிவித்துள்ளார்.

அதிர்ச்சியடைந்த ஒப்பந்த வாகன ஓட்டுநர்கள் தங்களுக்கு கூடுதல் தொகை வழங்க கோரி ஆவின் பால் விநியோகம் செய்வதை நிறுத்தியுள்ளனர். இதனால் நேற்று மாலை முதல் மதுரையின் புறநகர் பகுதிகளுக்கு ஆவின் பால் விநியோகம் தடைபட்டுள்ளது. மேலும் நேற்று இரவிலும் ஆவின் பால் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்த வாகனங்கள் வருகை தராத நிலையில், பால் விநியோகம் செய்வது தடைபடும் என பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஒப்பந்த வாகனங்களுக்கான கூடுதல் கட்டணம் வழங்க வேண்டும் எனக்கூறி பால்வளத்துறை அமைச்சர் மற்றும் ஆணையர் உள்ளிட்டோருக்கும் கடிதம் அனுப்பியும் போதிய நடவடிக்கை எடுக்காதது குறிப்பிடத்தக்கது.




வாங்க பேசலாம் நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்துகொண்டு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி,வி.ஜெ.சரண், திருநங்கை சாஷா,தோழர்.ருத்ரா,ஜெ.எச்.ஹேம்நாத்,எஸ்.பிரவீன்குமார்,வி.பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மேயர் க.வசந்தகுமாரி,மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன்,பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ்,மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி,மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.எ.சத்திய பிரபு, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி,ரமணிஆதிமுலம்,செ.சுரேஷ்,கி.வேலுமணி,எஸ்.ஜி.கருணாகரன்,இரா.விஜயகுமார் மாநகர மாணவரணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீ.கார்த்திக்,வே.சிவசுப்பிரமணியன், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் குட்டி (எ) தினேஷ்குமார்,பகுதி இளைஞரணியின் அமைப்பாளர் க.மு.சூரியா ஆகியோருடன் GENZ தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.